**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 411/2021**

**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சோனைமுத்து | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | கடையம் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(எதிரிகள் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கடையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் செங்கோட்டை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, புளியரை காவல்நிலைய நிலைய குற்றஎண்.124/2015, சட்டப்பிரிவுகள் 3, 4 of Explosive substances Act வழக்கினை காவல் ஆய்வாளர் பிரதாபன் மேல்விசாரணை செய்தபோது, அவர் பணிமாறுதலாகி சென்று விட்டதால் நான் அந்த வழக்கு கோப்பினை என்னுடைய மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

29.12.2017 ம் தேதி, சென்னை தடய அறிவியல் ஆய்வாளர் திருமதி.மஞ்சுளாதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தடய அறிவியல் அறிக்கை பெற்றேன். அந்த தடய அறிவியல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். சாட்சி பால்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.09.2019 ம் தேதி, பாலசாந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு தொடுப்பதற்கான முன் அனுமதி பெற்றேன். அந்த முன் அனுமதி ஆணை **அ.சா.ஆ.7** ஆகும். அத்துடன்

எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 4(b), 5(A) Explosive substances Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

நான் இந்த வழக்கை சரிவர மேல்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் பின் யோசனையோடு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், ஒருதலைபட்சமாக விசாரித்து எதிரிகள் மீது பொய்யாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:55:17 +0530